09.04.2025 OS.No.155/2018

சாட்சி : PW.3 பூசைத்துரை

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை**

**4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. மூக்கையா சேர்வை, அழகு சேர்வை ஆகியோருக்கு நான் பங்காளி என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்று சொன்னால் எழுத்துப்பூர்வமாக எதுவும் கொடுக்கவில்லை, ஆனால் என் தாத்தாவும் மூக்கையா சேர்வையின் அப்பாவும் உடன் பிறந்தவர்கள். மூக்கையா சேர்வையின் தந்தையும் என் தாத்தாவும் உடன் பிறந்தவர்கள் என்பதற்கு ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் எழுத்துப்பூர்வ ஆதாரம் எதுவும் இல்லை. மூக்கையா சேர்வை குடும்பத்தில், மூக்கையா சேர்வை மற்றும் அழகு சேர்வை எத்தனை இலக்கச் சொத்துக்கள் இருந்தது, அதனை பாகம் பிரித்துக் கொண்டார்களா என்றால் வீட்டு மனை, வயல் மற்றும் கொல்லை ஆகியவற்றை பாகம் பிரித்துக் கொண்டார்கள்.

2. எத்தனை இலக்கச் சொத்துக்களை என்னென்ன புல எண்களை பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் முடியாது. புல எண்.72/2 ல் எனக்கு எந்தவித உரிமையோ, பாகமோ கிரையாது என்று சொன்னால் சரிதான். மேற்படி மூக்கையா சேர்வை குடும்பத்தில் பாகம் ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால் சரிதான். மூக்கையா சேர்வை சுமார் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார் என்றால் எனக்கு 40 வயது இருக்கும்போது 1988 ல் இறந்துவிட்டார். மூக்கையா சேர்வை 1988 ல் இறந்துவிட்டதற்கு என்னிடம் ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் ஆதாரம் எதுவும் இல்லை. மூக்கையா சேர்வை சொத்தை கிரையம் வாங்கியது தொடர்பாக நான் சொல்லியுள்ள பத்திரம் எதையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

3. மூக்கையா சேர்வை எழுதிவைத்ததாக கூறப்படும் உயிலில் நான் எதுவும் சாட்சியா என்றால் இல்லை. மூக்கையா சேர்வை ஒருவேளை உயில் எழுதி வைத்திருந்தால் பங்காளியான என்னைத்தான் சாட்சி கையொப்பம் செய்ய அழைத்திருப்பார் என்றும், நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்பதால் அவ்வாறு

ஒரு உயில் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மூக்கையா சேர்வை எந்த தேதியில் உயில் எழுதினார் என்றும், அதில் யார்யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். மூக்கையா சேர்வையின் மகன் அழகுசேர்வை வெளியூர் மற்றும் வெளிநாட்டில் வேலை பார்த்தவர் என்றால் சரிதான்.

4. நடிகை கே.பி. சுந்தராம்பாள் எந்த வருடம் பிறந்தார் என்றால் எனக்குத் தெரியாது. அவர் எந்த ஆண்டு இறந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் 1968 ல் இறந்தார். மேற்படி அழகு சேர்வை எந்த வருடம் இறந்தார் என்றால் 2010 ல் இறந்தார். அழகு சேர்வை எந்த வருடம் நடிகை கே.பி. சுந்தராம்பாளிடம் வேலை பார்த்தார் என்றால் 1965 ல் வேலை பார்த்தார். நான் நடிகை கே.பி. சுந்தராம்பாள் வீட்டில் வேலை பார்த்தேனா என்றால் இல்லை. அழகு சேர்வைக்கு குடிப்பழக்கம் எதுவும் உள்ளதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை, ஆனால் அவர் குடும்பத்தை சரிவர கவனிக்கவில்லை. மூக்கையா சேர்வை வழக்கில் உள்ள தாவா உயிலையோ, வேறு எந்த உயிலையோ எழுதிவைக்கவில்லை என்றும், நான் வாதிக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. எனக்கும், 4, 5 பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் நீண்ட ஆண்டுகள் பகைமை உள்ளதாலும் நாங்கள் பேசிக்கொள்வதில்லை என்பதாலும் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**(6. 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்கா ஒத்திவைக்கப்படுகிறது).**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு
செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.